நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

11 June 2016

2016

## தரம் : உயர்நிலைப் பிரவு (ஆண்டு 11, 12)
## Level : Advanced (Year 11 & 12)

வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள் (வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)
Time Given : 75 Minutes (Including 10 minutes of reading time)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

கீழ்க்கண்ட பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக. (10 புள்ளிகள்)

கோணல்கள் என்றொரு சிறுகதைத் தொகுப்போடு ஐந்து சிறுகதையாசிரியர்கள் அறிமுகமானார்கள். இவர்களில் சா.கந்தசாமி, ஐராவதம் ஆகிய இருவரே தொடர்ந்து எழுதி சிறுகதைத் துறையில் நீடிக்கிறார்கள். கந்தசாமி இந்திய சாகித்திய அகாடமி விருது பெற்றார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின், அனைவருக்கும் கல்வி, தாய் மொழியில் பாடம் என்று ஏற்பட்டதின் ஒரு நல்ல விளைவு 1980களில் ஏராளமான எழுத்தாளர்கள் பக்குவமான சிறுகதைகள் படைக்கத் தொடங்கினார்கள். இன்று பிரபஞ்சன், வண்ணநிலவன், வண்ணதாசன் போன்றோர் இந்தப் பெரிய குழுவில் அடங்குவர். தொண்ணூறுகளில் ஜெயமோகன் அதிகமான சிறுகதைகள் எழுதினார்.

நல்ல படைப்புகளாக, வ.வே.சு.ஐயர் எழுதிய குளத்தங்கரை அரச மரம், புதுமைப்பித்தன் எழுதிய செல்லம்மாள், கல்கி எழுதிய கேதாரியின் தாயார், ராஜாஜி எழுதிய தேவயானி, க.நா.சுப்பிரமணியத்தின் தூக்கம் என்று தொடங்கி இந்திரா பார்த்தசாரதியின் தொலைவு, சுஜாதாவின் முனுசாமி 1,2,3,.... பிரபஞ்சனின் மீன், இப்படிப் பல இருக்கும். இன்னும் குறைந்தது ஐம்பதாவது அடுக்கிக் கொண்டு போகலாம்.

ஒரு மொழியின் வளர்ச்சியைப் பற்றி எவ்வளவுதான் ஒருவர் கூறினாலும், அது நேரடி அனுபவத்துக்கு ஈடாகாது. இப்போது மேற்சொன்ன படைப்புகளையும் ஒருவர் படித்த பிறகே அபிப்பிராயம் கொள்ள வேண்டும். ஆனால், எங்கு தேடுவது? அதற்கு சில வழிகள் இருக்கின்றன. சிறுகதைகளைப் பொறுத்த வரையில் கடந்த இருபது ஆண்டுகளில் வெளிவந்த தொகுப்பு நூல்கள் மிகவும் உதவும்.

சாகித்ய அகாடமி தமிழ்ச் சிறுகதை தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறது. அதேபோல நேஷனல் புக் டிரஸ்ட் என்ற நிறுவனமும் தமிழ்ச் சிறுகதைகள் வெளியிட்டிருக்கிறது. இந்நூல்கள் பல எழுத்தாளர்களின் படைப்புகளை ஒருசேரப் பரிசீலிக்க வாய்ப்பு தருகின்றன. சா.கந்தசாமி, விட்டல் ராவ் ஆகியோர் சிறப்பான எடுத்துக்காட்டாக தொகுப்புகள் வெளியிட்டிருக்கிறார்கள். இவற்றில் தொகுப்பாசிரியரின் விரிவான முன்னுரையுடன் ஒவ்வொரு எழுத்தாளர் பற்றியும் பயனுள்ள குறிப்பு இருக்கும். தமிழ்ப் படைப்பு மீது அக்கறை கொண்ட, ஆனால், தமிழ் படிக்க முடியாத வாசகர்களுக்கு ஆங்கில மொழியில் மூன்று நல்ல தொகுப்புகளை க.நா.சுப்ரமணியம் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கிறார். அவருடைய விரிவான முன்னுரை தமிழ்ச் சிறுகதை வரலாற்றைத் துல்லியமாகத் தரும். பிற எழுத்தாளர்களைப் படித்து அவர்கள் படைப்புகளை உலகறியச் செய்ய வேண்டும் என்று அயராது உழைத்த க.நா. சுப்ரமணியத்தின் பணிக்கு தமிழ் மொழியிலோ இதர மொழிகளிலோ ஈடு காண்பது கடினம்.

எல்லாக் கலை வடிவங்கள் போலச் சிறுகதைத் துறையும் பல திசைகளிலும் தன்னை விரிவுபடுத்திக் கொண்டு இருக்கிறது. பொதுவாக இன்று எந்தத் தமிழ்ப் பத்திரிகையாசிரியரையும் கேட்டால் 'இந்த நாளில் நல்ல கதையே வருவதில்லை' என்பார். ஆனால், போட்டி என்று அறிவிக்கும் போதெல்லாம் கணிசமான நல்ல கதைகள் வருகின்றன.

கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நாட்டில் இலக்கியச் சிந்தனை என்ற அமைப்பு அந்தந்த மாதம், அந்தந்த வருடம், எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகள் எனத் தேர்தெடுத்து நூலாகவும் வெளியிடுகிறது. ஆனால், மாதத்துக்கு மாதம் தேர்வாளர் மாறுவதால் சிறுகதைகளின் தரம் ஒரே சீராக இருப்பதில்லை. ஒவ்வொரு ஆண்டும் இலக்கியச் சிந்தனை தொகுப்பு அந்த ஆண்டின் சில சிறந்த முயற்சிகள் மற்றும் எழுத்தாளர்களின் அக்கறைகளைப் பதிவு செய்யத்தான் செய்கிறது.

ஒரு சிறுகதையாசிரியனே அவனுடைய சமகாலத்தவர் பற்றி மதிப்பீடும் அபிப்பிராயமும் தருவது உசிதமல்ல. அந்தக் குறைபாடுகளை உணர்ந்தே இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. எல்லா மதிப்பீடுகள் போலவே இதுவும் இறுதி மதிப்பீடு ஆகாது. இதே கட்டுரையை இன்னொருவர் எழுதினால் அது முற்றிலும் வேறுவிதமாக இருக்கக்கூடும். இலக்கியத்தின் சிறப்பே, அது பலருக்குப் பலவிதமான அனுபவத்தைத் தருவது தான்.

- அசோக மித்திரன்

1. எண்பதுகளில் தரமான சிறுகதைகள் பெருமளவில் தோன்றுவதற்குக் காரணம் என்ன? (2 புள்ளிகள்)

2. குளத்தங்கரை அரசமரம் தொடங்கி ஆரம்பகால சிறுகதைகளை அறிவதற்கு என்ன வழி இருக்கிறது? (1 புள்ளி)

3. தமிழ்ச் சிறுகதை வரலாற்றை திருத்தமான முறையில் அறிந்துகொள்வது எங்ஙனம்? (1 புள்ளி)

4. இலக்கியச் சிந்தனை என்பதன் மூலம் நீங்கள் அறிந்துகொண்டது என்ன? (2 புள்ளிகள்)

5. உரைப்பகுதியில் குறிப்பிடப்பட்டபடி, சாகித்திய அகாடமி செய்துள்ள இரு பணிகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

6. உரைப்பகுதியில் ஆசிரியர் கூற முற்படும் செய்தி என்ன? (2 புள்ளிகள்)

பின்வரும் புலவர்களில் கீழ்த்தரப்பட்டுள்ள பாடலடிகளுக்குப் பொருத்தமான புலவரைத் தெரிவுசெய்க. (5 புள்ளிகள்)

7. அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.
8. நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா நின்னைச் சரணடைந்தேன்
9. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு
10. பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன், யானே கள்வன்
11. சென்றுடுவீர் எட்டுத் திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

a. பாரதியார்
b. பாரதிதாசன்
c. இளங்கோ அடிகள்
d. கம்பன்

பின்வரும் நூல்களை எழுதிய அவுஸ்திரேலிய தமிழ் எழுத்தாளர்களைத் தெரிவு செய்க. (3 புள்ளிகள்)

12. அவுஸ்திரேலிய ஆதிவாசிக் கதைகள்
13. உயரப் பறக்கும் காகங்கள்
14. நீர்த்திரை கவிதைத் தொகுப்பு

a. சௌந்தரி கணேசன்
b. ஆழியாள்
c. மாத்தளை சோமு
d. ஆ. சி. கந்தராஜா

வினா: 15-16

பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (2 புள்ளிகள்)

15. பின்வருவனவற்றுள் மின்னூலகம் அல்லாதது
    a. நூலகம். கொம்
    b. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்
    c. தமிழ் இணையக் கல்விக் கழக நூலகம்
    d. சிட்னி தமிழ் அறிவக நூலகம்

16. சிட்னியில் வாழும் குழந்தைக் கவிஞர் இருவர்
    a. கவிஞர் அம்பியும் காசி ஆனந்தனும்
    b. வானொலி மாமா மகேசனும் கவிஞர் அம்பியும்
    c. வானொலி மாமா மகேசனும் கவிஞர் பாஸ்கரனும்
    d. இவர்கள் எவரும் இல்லை

வினாக்கள்: 17-21

பின்வரும் கடட்டங்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் அமைந்திருக்கும் நகரங்கள் எவை என்பதைத் தெரிவு செய்க. (5 புள்ளிகள்)

a. தஞ்சாவூர்
b. கன்னியாகுமரி
c. நல்லூர்
d. சிட்னி

17. துறைமுகப் பாலம்
18. மிக உயரமான திருவள்ளுவர் சிலை
19. தஞ்சை பெரிய கோயில்
20. விவேகானந்தர் பாறை
21. சங்கிலியன் தோப்பு

வினாக்கள் 22-25:

பின்வரும் குறட்பாக்களை நிறைவு செய்வதற்குப் பொருத்தமான அடிகளைத் தெரிவு செய்க. (4 புள்ளிகள்)

a. மெய்வருந்தக் கூலி தரும்
b. அன்றே மறப்பது நன்று
c. நல்விருந்து வானத்தவர்க்கு
d. உள்ளத் தனையது உயர்வு

22. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
23. வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
24. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
25. தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சி தன்

வினாக்கள்: 26-28

பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்கள் தருக (3 புள்ளிகள்)

26. Upload
27. Understanding
28. Social Media

வினா: 29

உயர்வகுப்புக்குரிய பாடத்திட்டத்தில் தரப்பட்ட தலைப்புகளும் உபதலைப்புகளும் மூன்று முக்கிய எண்ணக்கருக்களில் அடங்கியுள்ளன. அந்த மூன்றும் எவை? (3 புள்ளிகள்)

பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் உள்ள 30-31 வினாக்களுக்கு விடை தருக. (5 புள்ளிகள்)

குயிலுக்கு வாழ்வு கொடு

இறைவா! எனக்கின்னும்
பல்லாண்டுயிர் ஈந்தளிப்பாய்! - என்னை
மறையா திங்கு வைத்துத்
தமிழுக்கு வாழ்வளிப்பாய்! - கொடுஞ்
சிறையால் தமிழ்மாந்தர்
படுந்துயர் அறியாயோ? - அட
இறைவா! எனக்குயிர்
தந்தால் சிறை உடையாதோ?

உன்னை வணங்கி நின்ற
பாரதியின் பின்னொருவன்- நின்தாள்
தன்னை வணங்குகின்றேன்
அவனைப்போல் பாதியிலே - பாவி
என்னையும் நீ பறித்தால்
தமிழ்ச்சாதி ஏங்கிப்போகும்!- என்றன்
அன்னை வீழ்ந்து துடிப்பாள்
நீ என்னை அழைக்கலாமோ?

உயிரை நீட்டி என்னை
முன்போல் உலவ விடுவாய்!- சூழும்
துயிலை நீக்கி வைப்பாய்!
புதிதோர் துணிவளிப்பாய்! – அஞ்சா
வயிரநெஞ்சில் ஒன்றும்
மலைத்தோளும் ஈந்தருள்வாய்! - இந்தக்
குயிலை வாழவைப்பாய்
தமிழ் கூவவேண்டும் ஐயா

- கவிஞர் காசி ஆனந்தன்

30. இந்தக் கவிதையில் கவிஞர் கடவுளிடம் வேண்டும் மூன்று விடயங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

31. கவிஞர் கவிதையின் இரண்டாம் பகுதியில் செய்யும் ஒப்பீடு பற்றிக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

## 32. எழுத்தாக்கம் (15 புள்ளிகள்)

ஜூலை மாதம் இரண்டாம் திகதி நடைபெற இருக்கும் அவுஸ்திரேலியப் பொதுத் தேர்தலில் செனட் சபை உறுப்புரிமைக்கு உங்கள் குடும்ப நண்பர் ஒருவர் நி.ச.வே மாநிலத்திலிருந்து போட்டியிடுகிறார். பிரதான இரு கட்சிகளிலும் இல்லாமல் சிறிய கட்சி ஒன்றின் வேட்பாளராகப் போட்டியிடும் அவரை ஆதரித்து உங்கள் சமூகக் கூட்டம் ஒன்றில் உரையாற்ற அழைக்கப்பட்டுள்ளீர்கள். ஒரேயொரு தமிழ் வேட்பாளரான அவரை ஏன் சிட்னி வாழ் தமிழர்கள் இந்தத் தேர்தலில் ஆதரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கி சமூக உறுப்பினர்களுக்கு நீங்கள் ஆற்ற இருக்கும் உரையை 150 சொற்களில் எழுதுக.

அல்லது

சென்ற வாரம் 'ஒரு நாள் முதல்வராக' நி.ச.வே மாநில முதலமைச்சரின் அலுவலகத்தில் பணியாற்றும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தது. அந்த நாளின் அனுபவத்தை மீட்டிப் பார்த்து உங்கள் அனுபவங்களை 150 சொற்களில் விபரிக்குக.

(நூற்றைம்பது சொற்கள் எழுதுவதற்கு இரு பக்கங்கள் ஒதுக்குக. பக்கங்களுக்குக் கோடிடுக)

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2016